Source: *Tamil Murasu, p3*
Date: 23 August 2018

# கை, கால் வாய்ப்புண் நோயைக் கண்டுபிடிக்க புதிய சோதனை முறை

கை, கால் வாய்ப்புண் நோயைக் கொண்ட பிள்ளைகளை, அந் நோயின் அறிகுறிகள் தென் படுவதற்கு முன்னரே அடை யாளம் காண்பதற்கான வழியை தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

அந்தப் பிள்ளைகளின் உமிழ்நீர் துளிகளின் வழியாக அவர்களுக்கு அந்நோய் உள்ளதா என்பதை இந்த முறையின் வழி கண்டுபிடிக்க முடியும். இதற்கான சோதனைக் கருவியைப் பாலர் பள்ளிகளிலும் பிள்ளை பராமரிப்பு நிலையங் களிலும் அறி முகம் செய்வது இந்த ஆய்வா ளர்களின் விருப்பம். முதலில் அவர்கள், மேலும் அதிகமான பிள்ளைகளின் மீது அந்தக் கருவிகளைச் சோதனை செய்து, தேவைப்படும் அனுமதியை சுகாதார மருத்துவ ஆணையத்திடம் பெற வேண்டும்.

வாய்ப்புண், தோல் தடித்தல், காய்ச்சல் ஆகிய அறிகுறிகளின் வாயிலாக பிள்ளைகளுக்கு இந் நோய் உள்ளதா என்பதைக் கண்டறிவது மருத்துவர்களின் வழக்கம் என்று இந்த ஆய்வின் தலைமை ஆய்வாளர்களில் ஒருவரான இணை பேராசிரியர் ஜஸ்டின் சியூ தெரிவித்தார். இருந்தபோதும், இந்த அறிகுறிகள் இல்லாமலேயே ஒருவருக்கு இந்நோய் தொற்றி இருக்கலாம் என்றும் அவர் கூறினார். ‘ஏஸ்டார்’ எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆய்வு அமைப்பின் மூலக்கூறு மற்றும் உயிரணுவியல் நிலையம், கே கே மகளிர் சிறார் மருத்துவமனை, தைவானின் சாங் குங் பல் கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து தேசிய பல்கலைக் கழகம் இந்த புதிய முறையை உருவாக்கி உள்ளது.

இவ்வாண்டில் இதுவரை கை, கால் வாய்ப்புண் நோய்ச் சம்பவங் களின் எண்ணிக்கை 28,000 ஆக உள்ளது. கடந்த ஆண்டு முழுவதற்குமான கிருமித் தொற்றுச் சம்பவங்களைவிட இது அதிகமாக உள்ளது. 82 பிள்ளைகளிடம் இந்த புதிய சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையின் துல்லியம் 90%ஆக இருந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.